# DEPOSITION OF WITNESS

In the Special Court for trial of cases under Prevention of Corruption Act,

Tiruchirappalli.

## SPECIAL CASE NO.07/2014.

Deposition of Witness for Prosecution / Defense – **P.W.02. (L.W.02)**

| | |
|---|---|
| Name | : Thiru Selvam. |
| Father's / Husband Name | : Thiru Perumal |
| Village & Taluk | : Tiruchy |
| District | : Tiruchy |
| Age | : 80/2026. |

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act (44 of 1969) of the day of Dated :– 12.08.2026.

விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11 : 17 A.M.

**முன் விசாரணை –** நான் திருச்சி பெல் நிறுவனத்தில் ஃபோர்மேன் ஆக பணிபுரிந்து 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் விருப்ப ஓய்வு பெற்றேன். எனக்கு ஒரு மகன், 4 பெண்கள் உள்ளனர். ராஜேஸ்வரி என்பவர் என் மகன் வெங்கடேசனின் மனைவி ஆவார். என் மகனுக்கும், ராஜேஸ்வரிக்கும் திருமணமானது எனக்கு தெரியாது. திருமணம் செய்து கொண்ட பிறகு என் மகன் என் வீட்டிலும், ராஜேஸ்வரி அவரது வீட்டிலும் இருந்தார்கள். எனது மருமகள் ராஜேஸ்வரி தன்னை வாழவைக்கவில்லை என்றும், வரதட்சணை கொடுமை செய்வதாகவும் நீதிமன்றத்தில் மனு கொடுத்தார். அப்போது என் மகன் வெங்கடேசன் விவாகரத்து கோரி

அறிவிப்பு கொடுத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். கோர்ட்டிலிருந்து திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு விசாரிக்க சொல்லி அறிக்கை அனுப்பப்பட்டு அதன் பேரில் எங்கள் குடும்பத்தினரை விசாரணைக்காக அழைத்தார்கள். தேதி நினைவில் இல்லை, 2013 ம் ஆண்டு 4 வது மாதம் விசாரணைக்காக அழைத்தார்கள். விசாரணைக்காக என்று அழைத்துவிட்டு என் மனைவி சகுந்தலாவையும், மூத்த மகள் சுமதியையும் திருவரம்பூர் மகளிர் காவல் நிலைய போலிசார் கைது செய்தார்கள். நானும், என் மருமகன் ஜீவானந்தமும் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று விட்டோம்.

அதன்பிறகு 2013 ம் ஆண்டு 6 வது மாதம் திரும்ப திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்றோம். அன்று தேதி 19 என்று நினைக்கிறேன். அன்று நானும், என் மருமகனும் எனது மகளை ஜாமீனில் விடுவிக்க வேண்டி ஆஜர் எதிரியான திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் கார்த்திகாயினி அவர்களிடம் கேட்டோம். அதற்கு அவர் என் மருமகன் பாஸ்போர்ட்டை ஒப்படைக்கும்படி கேட்டார். எனவே அவர் கேட்டுக் கொண்டபடி பாஸ்போர்ட்டை அவரிடம் ஒப்படைத்தோம். என் மருமகனை வேலைக்கு அழைத்ததால் அதற்காக பாஸ்போர்ட் தேவைப்பட்டதால் திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளரிடம் 26.06.2013 ம் தேதியன்று என்று நினைக்கிறேன், அன்று நானும், என் மருமகனும் பாஸ்போர்ட்டை திருப்பி கொடுக்குமாறு கேட்டோம். அதற்கு திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் பாஸ்போர்ட் வேண்டுமென்றால் ரூ.35,000/- பணம் கொடுக்குமாறு கேட்டார். நான் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். திருவரம்பூர் அனைத்து

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

மகளிர் காவல் ஆய்வாளர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 1வது எதிரி ஆவார். 1வது எதிரி பெல் நிறுவனத்திலிருந்து ரிட்டயர்டு ஆகியுள்ளீர்கள் என்று கூறுகின்றீர்கள், உங்களிடம் பணம் இல்லையா? என்று கேட்டார். நான் நகைகளை அடகு வைத்துதான் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். எனவே 1ம் எதிரி ரூ.10,000/- மாவது முதலில் எடுத்துக் கொண்டு நாளைக்கு வாருங்கள், பாஸ்போர்ட் கொடுப்பது பற்றி யோசிக்கலாம் என்று சொன்னார். அப்போது மணி காலை 9.00 இருக்கும். எனக்கு பணம் கொடுக்க விருப்பமில்லாததால் நான் என் வீட்டிற்கு சென்று விட்டு பணம் எடுத்துக் கொண்டு விஜிலென்ஸ் அலுவலகத்திற்கு சென்றேன். அதற்கு முன்பு சத்திரத்தில் புகாரை தயார் செய்து கொண்டு விஜிலென்ஸ் அலுவலகம் சென்று காவல் ஆய்வாளரிடம் விபரங்களை சொன்னேன். புகாரை கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் அன்று நான் காவல் ஆய்வாளரிடம் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ளது எனது கையெழுத்துதான். அந்த **புகார் அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன்பின் விஜிலென்ஸ் ஆய்வாளர் எனது புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதில் எனது கையெழுத்தை பெற்று அதன் நகல் ஒன்றை என்னிடம் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து என்றுடையதுதான். **முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மறுநாள் 27.06.2013 அன்று காலை 9.00 மணி அளவில் நான் திருச்சி விஜிலென்ஸ் அலுவலகத்திற்கு சென்றேன். விஜிலென்ஸ்

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

ஆய்வாளர் என்னை அவரது அறையில் காத்திருக்குமாறு கூறினார். நான் காத்திருந்தபோது பரிமளாதேவி, வேணுகோபால் ஆகியோர் சாட்சிளாக விஜிலென்ஸ் அலுவலகத்திற்கு வந்தார்கள். விஜிலென்ஸ் காவல் ஆய்வாளர் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். சாட்சிகளிடம் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை கொடுத்து படிக்க சொல்லியும், என்னிடம் விபரம் கேட்டுக் கொளும்படி சொன்னார். அதன்படி அவர்கள் படித்துவிட்டு என்னிடம் விபரம் கேட்டபோது நான் லஞ்சமாக ரூ.35,000/- கேட்டது உண்மைதான் என்று சொன்னேன்.

அதன்பின் விஜிலென்ஸ் ஆய்வாளர் என்னிடம் கேட்டுக் கொண்டதால் நான் எடுத்து சென்றிருந்த பணம் ரூ.10,000/-த்தை பத்து ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாக மேஜையில் வைத்தேன். 2 காவலர்களை அழைத்து சோதனை செய்து காண்பிக்கும்படி ஆய்வாளர் சொன்னார். அதன்படி கண்ணாடி டம்ளரில் ஒரு காவலர் சொர சொரப்பான பவுடரை தண்ணீரில் கரைத்து தயார் செய்தார். மற்றொரு காவலர் ரூபாய் நோட்டுக்களை தொட்டுவிட்டு அந்த கரைசலில் கையை நனைத்தபோது கலர் மாறவில்லை. மீண்டும் ரூபாய் நோட்டுக்களில் ஒரு பவுடரை தடவிய பிறகு அதே காவலர் அந்த ரூபாய் நோட்டுக்களை தொட்டுவிட்டு கரைசலில் கையை நனைத்தபோது அந்த கரைசல் சிகப்பு கலராக மாறியது. பவுடர் தடவப்பட்ட பணத்தை எடுத்து எனது பாக்கெட்டில் வைத்தனர். நான் கொடுத்த ரூபாய் நோட்டுக்களின் எண்களை அறிக்கையில் குறித்துக் கொண்டார்கள். அது சம்பந்தமாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான், அலுவல் சாட்சிகள் மற்றும் ஆய்வாளர் அதில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்படைப்பு மகஜரில்

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த **ஒப்படைப்பு மகஜர் அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள ரூபாய் நோட்டுக்கள் நான் விஜிலென்ஸ் ஆய்வாளரிடம் ஒப்படைத்த நோட்டுக்கள்தான். அந்த **ரூபாய் ரூ.10,000/– ( பத்து ஆயிரம் நோட்டுக்கள் ) நோட்டுக்கள் உள்ள புகைப்படம் சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

26.06.2013 ம் தேதியன்று நாங்கள் திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்றிருந்தபோது 1 வது எதிரி மறுநாள் அதாவது 27.06.2013 அன்று தான் ஒரு திருமணத்திற்கு செல்ல வேண்டியிருப்பதாகவும், மதியம் 1.00 மணிக்கு மேல்தான் காவல் நிலையத்திற்கு வருவேன் என்று பேசிக்கொண்டிருந்தார். அந்த விபரத்தை நான் விஜிலென்ஸ் ஆய்வாளரிடம் சொன்னேன். அதன்படி நானும், அலுவல் சாட்சிகள், விஜிலென்ஸ் ஆய்வாளர் மற்றும் போலிசாருடன் 1.00 மணிக்கு விஜிலென்ஸ் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு திருச்சி – தஞ்சாவூர் சாலையில் திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு 1/2 கி.மீ. துூரத்திற்கு முன்பாகவே சர்வீஸ் சாலையில் வாகனங்களை நிறுத்தி என்னையும், அலுவல் சாட்சி பரிமளாதேவியையும் இறக்கிவிட்டு, விஜிலென்ஸ் ஆய்வாளர் திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று பணத்தை கொடுக்கும்படி கூறி அனுப்பி வைத்தார். எங்களை 1.45 மணி அளவில் இறக்கிவிட்டார்கள். ஒரு 5, 10 நிமிடங்களில் நாங்கள் இறங்கி திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் உள்ளே சென்றோம். அங்கு 1 வது எதிரி சேரில் அமர்ந்திருந்தார். அவருக்கருகில் ஒரு நபர் நின்று

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

கொண்டிருந்தார். ஆஜர் 2 வது எதிரிதான் அங்கு நின்றிருந்த நபர்ஆவார். 1 வது எதிரி என்னிடம் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா? என்று கேட்டார். நான் கொண்டு வந்திருப்பதாக சொன்னேன். அருகிலிருந்த அலுவல் சாட்சி பரிமளாதேவியை பார்த்து இவர் யார் என்று கேட்டார். நான் எனது இளைய மகள் என்று சொன்னேன். அதற்கு 1 வது எதிரி ஏன் வயசு பொண்ணுங்களையெல்லாம் போலிஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வர்றீங்க என்று கேட்டார். நான் பெல் நிறுவனத்தில் வேலை இருப்பதாகவும் அதற்காக அழைத்து வந்ததாகவும் கூறினேன்.

பின்னர் 1 வது எதிரி உங்களிடம் பணம் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது என்று கூறி, பக்கத்தில் நின்றவரிடம் கொடுங்கள் நான் அவரிடம் வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னார். நான் பணத்தை எடுத்து 2 வது எதிரியிடம் கொடுத்தேன். அவர் அந்த பணத்தை வாங்கி எண்ணிப் பார்த்தார். 1 வது எதிரி சரியாக இருக்கிறதா? என்று கேட்டார். 2 வது எதிரி சரியாக இருக்கிறது என்று சொன்னார். 2 வது எதிரி அந்த பணத்தை தனது வலதுகைபக்க அண்டர்வேர் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். அதன்பிறகு நாங்கள் வெளியே வந்து விஜிலென்ஸ் ஆய்வாளர் சொன்னவாறு தலையை சொறிந்து சைகை காண்பித்தேன்.

விஜிலென்ஸ் ஆய்வாளர் குழுவினருடன் எங்களிடம் வந்து விட்டார். எங்களை அழைத்துக் கொண்டு திருவரம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் உள்ளே சென்றார். எதிரிகளை நான்தான் அடையாளம் காண்பித்தேன். விஜிலென்ஸ் ஆய்வாளர் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். 1 வது எதிரி Wish பண்ணினார். விஜிலென்ஸ் ஆய்வாளர் என்னை வெளியே இருக்கும்படி சொன்னார். நான் வெளியில்

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

காத்திருந்தேன். எதிரிகளை விஜிலென்ஸ் போலிசார் கைது செய்து அழைத்து சென்றார்கள். என்னை மறுநாள் விஜிலென்ஸ் அலுவலகத்திற்கு வரும்படி சொன்னார்கள். மறுநாள் என்னை விஜிலென்ஸ் போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**குறுக்கு விசாரணை – எதிரி தரப்பில் –** கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் குவிமுச 242 (3) பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்ததன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிவுற்ற நேரம் : 12 : 10 P.M.

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

Taken over by me in open court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct

Puviyarasu V

Digitally signed by Puviyarasu V
Date: 2026.08.12 12:32:49 +0530

Special Judge,
Special Court for trial of cases under
prevention of Corruption Act,
Tiruchirappalli.